# Sample Question paper - ( Tamil )
## II - TERM (Oct 2010 - March 2011)
(Class - I X)

**மாதிரி வினாத்தாள் - தமிழ்**

**ஒன்பதாம் வகுப்பு**

**(அக்டோபர் 2010 - மார்ச் 2011)**

| | |
|---|---|
| Max. Marks : 80 | Time : 3 hours |
| ***மொ.மதிப்பெண்கள் : 80*** | ***கால அளவு : 3 மணி*** |

The question paper is diveded into four sections:
**இக் கேள்வித் தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.**

| | | |
|---|---|---|
| **SECTION : A** | Reading comprehension | - 15 Marks |
| ***பிரிவு : அ*** | ***படித்தல் (உரைநடைப் பகுதி)*** | ***-15 மதிப்பெண்கள்*** |
| **SECTION : B** | **Writing** | - 15 Marks |
| ***பிரிவு : ஆ*** | ***எழுதுதல்*** | ***-15 மதிப்பெண்கள்*** |
| **SECTION : C** | Grammar | - 15 Marks |
| ***பிரிவு : இ*** | ***இலக்கணம்*** | ***-15 மதிப்பெண்கள்*** |
| **SECTION : D** | **Literature / Text Books** | - 35 Marks |
| ***பிரிவு : ஈ*** | ***இலக்கியம்/தமிழ்ப் பாடநூல்கள்*** | ***-35 மதிப்பெண்கள்*** |

---

★ எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டும்.

★ ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### பிரிவு - அ
படித்தல் - 15 மதிப்பெண்

**1. கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

எரிபொருள் சார்ந்த தீயினை ஐந்து வகையாகப் பிரிப்பர். முதல் வகை எரிந்து சாம்பலாகக் கூடிய தாள்; மரம், வைக்கோல், ஓலை முதலான பொருளைச் சார்ந்தது. இவை சிறிய அளவில் இருந்தா தண்ணீர் ஊற்றியும்

மணலைக் கொட்டியும் அணைக்கலாம். பெரிய அளவில் இருக்குமாயின் முதலில் தீ அணைப்பானைப் பயன்படுத்த வேண்டும். தீ அணைப்பானில் வேதிப் பொருள்கள் உள்ளன. அணைப்பானில் சோடியம் பை கார்பனேட் கரைசல் நிரப்பப்பட்டிருக்கும். ஒரு சிறு புட்டியில் கந்தக அமிலம் இருக்கும். தீ அணைப்பானைக் கவிழ்த்தால் இவை இரண்டும் கலந்து வெளிப்படும். கார்பன்டை ஆக்ஸைடு வாயு உண்டாகும். இவ்வாயுவின் உயர்ந்த அழுத்தும் சக்தியினால் வாயுவானது 4 1/2 மீட்டர் முதல் 7 1/2 மீட்டர் வரை வேகமாகப் பீறிட்டு அடிக்கும். தீயை அணைக்கும்.

**வினாக்கள்**

(i) *எரிபொருள் சார்ந்த தீயினை எத்தனை வகையாகப் பிரிப்பர்?* *(1)*

அ. மூன்று
ஆ. நான்கு
இ. ஐந்து
ஈ. பத்து

(ii) *சிறிய அளவு தீயை எவ்வாறு அணைக்கலாம்?* *(1)*

அ. தண்ணீர், மணல்
ஆ. எண்ணெய்
இ. கயிறு
ஈ. பஞ்சு

(iii) *பெரிய அளவு தீயை எவ்வாறு அணைப்பர்?* *(1)*

அ. மணல்
ஆ. தண்ணீர்
இ. தீயணைப்பான்
ஈ. மரம்

(iv) *அணைப்பானில் எவை கலந்து நிரப்பப்பட்டிருக்கும் ?* *(1)*

அ. சோடியம் , கார்பன்
ஆ. சோடியம் பை கார்பனேட், கந்தக அமிலம்
இ. கார்பன் , கந்தகம்
ஈ. காகிதம், எண்ணெய்

(v) *தீ அணைப்பானைக் கவிழ்த்தால் எவ்வாயு நிரம்பும்?* *(1)*

அ. காற்று
ஆ. நீர் காற்று
இ. கார்பன்டை ஆக்ஸைடு
ஈ. அனல் காற்று

**2. கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

உலகில் மக்கள் நோயின்றி வாழவே விரும்புகின்றனர். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது பழமொழி. உடல் நலத்துடன் வாழ சத்துள்ள உணவு எது என்று நாம் அறிதல் வேண்டும். அத்எதுடன் உடல் நலத்துக்கு கேடு விளைவிப்பவனவற்றை சுவை மிக்கனவாயினும் ஒதுக்க வேண்டும். நம் உடலுக்கு மிகவும் தீங்கு விளைவிப்பதாக உள்ளது புகையிலை. இது ஒருவகைச் செடியிலிருந்து கிடைக்கிறது. இந்த இலையிலிருந்து பீடி, சுருட்டு, சிகரெட்டு முதலியன தயாரிக்கிறார்கள். புகைக்கப் பயன்படுத்துவதால் இது புகையிலை எனப் பெயர் பெற்றது. புகையிலையில் `நிக்கோடின்′ என்னும் நச்சுப் பொருள் உள்ளது. எந்த வடிவில் இதனை உட்கொண்டாலும் இது உடலுக்குக் கேடு விளைவிக்கும். நாக்கு வறட்சியை ஏற்படுத்தும். சிறிது நேரச் சுறு சுறுப்பைக் கொடுத்து பின் மூளையை மழுங்கச் செய்யும். வாந்தி, மயக்கம், நரம்புத் தளர்ச்சி ஆகியவற்றை ஏற்படுத்தும். புற்று நோய் ஏற்படப் பெரிதும் வாய்ப்புண்டு என மருத்துவர் கூறுகின்றனர்.

**வினாக்கள்**

(i) *இப் பத்தியில் உள்ள பழமொழியை எழுதுக?* *(1)*
அ. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
ஆ. நோய் வருமுன் காக்க
இ. சுவரின்றி சித்திரம் வரைய முடியாது
ஈ. கண்ணை விற்று சித்திரம் வாங்குவது

(ii) நம் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் புகையிலை எங்கு கிடைக்கும் *(1)*
அ. மரம்
ஆ. செடி
இ. கொடி
ஈ. புல்

(iii) *புகையிலையினால் ஏற்படும் நோய் எது?* *(1)*
அ. புற்று நோய்
ஆ. இதய நோய்
இ.காச நோய்
ஈ. வயிற்று நோய்

(iv) உடல் நலத்துடன் வாழ்த் தேவையானது *(1)*

அ. இனிப்பு
ஆ. பழம்
இ. தேங்காய்
ஈ. சத்துள்ள உணவு

(v) பீடி, சுருட்டு, சிகரெட்டு முதலியன தயாரிக்க தேவையானது (1)
அ. பச்சிலை
ஆ. வேப்பிலை
இ. புகையிலை
ஈ. மர இலை

**3. கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம் என்ற உறுதி எழச் செய்தார் காந்தியடிகள். போர் முகாம் அதைத்தன்று - எளிய குடில் அமைத்து. ஆத்திரம் ஊட்டி அன்று - அன்பினை ஊட்டி. மகான்களிடம் அமைந்திருப்பதாகக் கூறப்படும் அற்புதங்களைக் கண்டவர் அல்லர் அவர். காந்தியடிகள் நடத்திய அற்புதத்தை நாம் நம் கண்களாற் கண்டோம். அந்த அரையாடை மனிதர் கோடானு கோடி மக்களுக்கு மானமுள்ள வாழ்வு பெற்றுத் தந்து அற்புதம் படைத்தார். ``இவரா இந்தியாவின் தலைவர்'' என்று நகையாடியவர்கள் அந்த அற்புதம் நடைபெற்ற பிறகு ``இவரல்லரோ தலைவர்'' என்று புகழ்ந்தனர். இந் நாட்டுக்கு மட்டுமன்றி அடிமைத் தளையை உடைத்திட விரும்பும் எந் நாட்டுக்கும் அவர் காட்டிய அறப்போர் முறை பொருத்தமானது என்று ஆய்வாளர் பலர் கூறுகின்றனர்.

**வினாக்கள்**

(i) நாமிருக்கும் நாடு நமது என்ற எண்ணத்தை எழச் செய்தவர் (1)
அ. கவிஞர் வாலி
ஆ. வைரமுத்து
இ. காந்தியடிகள்
ஈ. காமராசர்

(ii) போர் முகாம் அமைக்காமல் காந்தியடிகள் எவ்வாறு போர் செய்தார்? (1)
அ. எளிய முறையில் ஆத்திரம் ஊட்டினார்

ஆ. கத்தி, கேடயமணிந்து

இ. துப்பாக்கி ஏந்தி

ஈ. அன்பினை ஊட்டி

(iii) *காந்தி செய்த அற்புதம் என்ன?* (1)

அ. மானமுள்ள வாழ்வு தந்தார்

ஆ. உணவு தந்தார்

இ. இருக்க வீடு தந்தார்

ஈ. உடுக்க உடை தந்தார்

(iv) *இவரை இகழ்ந்த மக்கள் எவ்வாறு போற்றினர்?* (1)

அ. இவரல்லரோ மனிதர்

ஆ. இவரல்லரோ தலைவர்

இ. இவரல்லரோ மகான்

ஈ. இவரல்லரோ நற்குடி மகன்

(v) *காந்தி மகான் நடத்திய போர் எது?* (1)

அ. மறப்போர்

ஆ. அறப் போர்

இ. வாய்ப் போர்

ஈ. சொற் போர்

## பகுதி - ஆ

1. களவு போன பொருள்களைக் கண்டுபிடித்துத் தருமாறு காவல் துறை அதிகாரிக்குக் கடிதம் எழுதுக (6)

(அல்லது)

மாற்றுச் சான்றிதழ் வேண்டி பள்ளித் தலைமையாசிரியருக்குக் கடிதம் எழுதுக

★ இரண்டு கடிதங்களிலும் உனது முகவரி சங்கரன்/ சங்கரி, 12 அண்ணா நகர், முதல் தெரு , சென்னை. என்று கொள்க.

2. **ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.** (6)

அ. முன்னுரை - பாரதியின் பா நலம் - தேசிய ஈடுபாடு - கண்ணன் பாட்டு - குழில் பாட்டு - கட்டுரைகள் - புதியன மீது நாட்டம் - தீர்க்கதரிசி - அழியாக் கவிதை - பாஞ்சாலி சபதம்.

ஆ. பெருந்தலைவர் - முன்னுரை - காமராசர் - தேசத் தொண்டு - சமூகத் தொண்டு - இலவசக் கல்வி - ஏழைப் பங்காளன் - பதவி மோகம் அற்றவர் - எளியவர்- முடிவுரை

இ. நூல் நிலையம் - முன்னுரை - நூலக அமைப்பு - நூல்கள் சேர்த்தல் - நூல் வகையாகப் பிரித்தல் - கணினிப் பயன்பாடு - தேவை - பள்ளி தோறும் நூலகம் - எதிர் நோக்கும் பிரச்சினை - தீர்வு காணல் - முடிவுரை .

**3. உனது பள்ளியில் நடைபெற்ற மாவட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெற்ற மாணவனைப் பாராட்டி அறிக்கை ஒன்று எழுதுக. *(3)***

***(அல்லது)***

**உனது ஊரில் நடைபெற்ற மருத்துவ முகாம் குறித்து அறிக்கை ஒன்று எழுதுக.**

## பகுதி - இ

***1. சான்று தருக: (எவையேனும் மூன்று மட்டும்)*** ***(3)***

(i) பெயர்ப் பகாப்பதம்

அ. சால

ஆ. கொல்

இ. நட

ஈ. மலை

(ii) நிகழ்கால இடைநிலை

அ. கின்று

ஆ. த்

இ. ப்

ஈ. ம்

(iii) குறிப்பு வினையாலணையும் பெயர்ப் பகுபதம்

அ. நல்லவன்

ஆ. பொன்னன்

இ. நடந்தான்

ஈ. சென்ற மாணவன்

(iv) அல்வழிப் புணர்ச்சி

அ. சுடு சோறு

ஆ. முருகனது வேல்

இ. சுக்குக் காப்பி

ஈ. கற்றூண்

(v) பகுபதம்

அ. நடப்பான்

ஆ. வா

இ. போ

ஈ. மலை

**2. நிரப்புக. (எவையேனும் மூன்று மட்டும்) (3)**

(i) பதம் --------வகைப்படும்.

அ. 1

ஆ. 2

இ. 3

ஈ. 4

(ii) தத்தை என்பது ------- ஆகும்.

அ. வட சொல்

ஆ. திரி சொல்

இ. திசைச் சொல்

ஈ. இயற் சொல்

(iii) சாரியை அடுத்து வரும் பகுபத உறுப்பு ------- எனப்படும்

அ. விகாரம்

ஆ. விகுதி

இ. சாரியை

ஈ. சந்தி

(iv) புணர்ச்சி ----- வகைப்படும்.

அ. ஒன்று

ஆ. இரண்டு

இ. மூன்று

ஈ. நான்கு

(v) வேற்றுமை உருபு மறைந்து நிற்கப் புணர்வது ----- ஆகும்.

அ. வேற்றுமைப் புணர்ச்சி

ஆ. வேற்றுமைத் தொகை

இ. வேற்றுமை விரி

ஈ. அல்வழிப் புணர்ச்சி

**3. கூறியவாறு செய்க.** ***(எவையேனும் மூன்று மட்டும்)*** ***(3)***

(i) படித்தான் *(பகாப்பதமாக்குக)*

அ. படிப்பான்

ஆ. படித்தீர்

இ. படி

ஈ. படியேல்

(ii) பையன் *(குறிப்புப் பெயரெச்சப் பகுபதமாக்குக)*

அ. நல்ல பையன்

ஆ. ஓடிய பையன்

இ. எழுதிய பையன்

ஈ. படித்த பையன்

(iii) கேணி *( ஒரே பொருள் தரும் சொல் எழுதுக)*

அ. சாவி

ஆ. மஞ்ஞை

இ. கிளி

ஈ. கிணறு

(iv) நாடு *( இடப் பெயர் பகுபதமாக்குக)*

அ. நாடன்

ஆ. நாட்டினான்

இ. நாட்டுக்காரன்

ஈ. நாடான்

(v) பசு *(திசைச் சொல்லாக்குக)*

அ. கிள்ளை

ஆ. பிள்ளை

இ. பெற்றம்

உ. ஆ

***4. இலக்கணக் குறிப்பு தருக. (மூன்று மட்டும்)*** ***(3)***

(i) அமர்ந்தான்

அ. பகாப்பதம்

ஆ. பகுபதம்

இ. இயற் சொல்

ஈ. வட சொல்

(ii) மரவேர்

அ. இயல்புப் புணர்ச்சி

ஆ. அல்வழிப் புணர்ச்சி

இ. விகாரப் புணர்ச்சி

ஈ. திசைப் பெயர் புணர்ச்சி

(iii) காது

அ. இயற் சொல்

ஆ. திரி சொல்

இ. திசைச் சொல்

ஈ. வட சொல்

(iv) நூல்

அ. இயற்சொல்

ஆ. திரிசொல்

இ. திசைச் சொல்

ஈ. வட சொல்

(v) பைந்தமிழ்

அ. விகாரப் புணர்ச்சி

ஆ. குற்றியலுகரப் புணர்ச்சி

இ. பண்புப் பெயர் புணர்ச்சி

ஈ. திசைப் பெயர் புணர்ச்சி

**5. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க. (மூன்று மட்டும்) (3)**

(i) அ.நிலை மொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் புணர்வது புணர்ச்சி

ஆ.நிலைமொழியும் வருமொழியும் இணைவது புணர்ச்சி

இ. நிலைமொழியும் வருமொழியும் ஒன்றுவது புணர்ச்சி

ஈ. நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் இயைவது புணர்ச்சி

(ii) அ. மலை வீடிடு இத்தொடரில் மறைந்து நின்று பொருள் தரும் எழுத்து 'கு'

ஆ. மலை வீடிடு இத்தொடரில் மறைந்து நின்று பொருள் தரும் எழுத்து 'ஏ'

இ.மலை வீடிடு இத்தொடரில் மறைந்து நின்று பொருள் தரும் எழுத்து `இன்'
ஈ. மலை வீடிடு இத்தொடரில் மறைந்து நின்று பொருள் தரும் எழுத்து `ஆல்'

(iii) அ. கல்+சிலை இதில் ல கர மெய் ற கரமாகும்
ஆ. கல்+சிலை இதில் ல கர மெய் ள கரமாகும்
இ. கல்+சிலை இதில் ல கர மெய் ர கரமாகும்
ஈ. கல்+சிலை இதில் ல கர மெய் ந கரமாகும்

(iv) அ. கொண்ட இச் சொல்லின் பகுதி `கொள்'
ஆ. கொண்ட இச் சொல்லின் பகுதி `கொண்'
இ. கொண்ட இச் சொல்லின் பகுதி `கோ'
ஈ. கொண்ட இச் சொல்லின் பகுதி `கொடு'

(v) அ. எழுதினான் இச் சொல்லின் இடைநிலை `த்'
ஆ. எழுதினான் இச் சொல்லின் இடைநிலை `ட்'
இ. எழுதினான் இச் சொல்லின் இடைநிலை `ன்'
ஈ. எழுதினான் இச் சொல்லின் இடைநிலை `ஆன்'

## பகுதி - ஈ

**1. கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

ஒவ்வொருவருக்கும் இரு கடமைகள் உள. ஒன்று வீட்டுக் கடமை. மற்றொன்று சமுதாயக் கடமை. இவற்றுள் வீட்டுக் கடமை வெளிப்படையானது; இயல்பானது. இயல்பினான் இல் வாழ்க்கை வாழ்வான் என்று வள்ளுவர் குறிப்பிடுவார். பெற்றோருக்கும் சுற்றத்தாருக்கும் குடும்பத்துக்கும் குழந்தைகட்கும் செய்வனவெல்லாம் பள்ளத்து நீரோட்டம் போல மிக இயல்பான கடமைகளாகும். இவற்றைச் செய்வதால் புகழ் வருவதில்லை. செய்யாவிட்டால் தான் பழி வரும் குழந்தை வளர்ச்சி, குடும்ப உறவு, குடும்பக் காப்பு, குடும்பப் பொருளாதாரம் , குடிக் குணம் இவையெல்லாம் சிறிய செயல்கள் அல்ல. இதனை இல்லாண்மை என்று பாராட்டுவார் வள்ளுவர். பேராறு நேரே வயலை வளப்படுத்தாது. சிறு வாய்க்கால் தான் வயலை வளப்படுத்தும். ஆதலின் நன்றாகத் தன் குடும்பத்தை நடத்துவாரை நாட்டின் ஒரு பகுதிக் கடமையைச் செய்பவராகவே மதிக்க

வேண்டும். 'குடி செயல் வகை' என்ற அதிகாரத்தில் தன் குடும்பம் பேணுவதை ஒரு பெருங் குறிக்கோளாகக் கருத வேண்டும் என்று திருக்குறள் வலியுறுத்தும்.

**வினாக்கள்**

(i) ஒவ்வொருவருக்கும் எத்தனை கடமைகள் உள? *(1)*

அ. ஒன்று
ஆ. இரண்டு
இ. மூன்று
ஈ. பத்து

(ii) மிக இயல்பான கடமை எது? *(1)*

அ. உறவினர்க்குச் செய்வது
ஆ. நண்பருக்குச் செய்வது
இ. கடவுளுக்குச் செய்வது
ஈ. விருந்தினருக்குச் செய்வது

(iii) கடமையைச் செய்யாவிடின் என்ன கிடைக்கும்? *(1)*

அ. புகழ்
ஆ. பழி
இ. பாராட்டு
ஈ. செல்வம்

(iv) வயலை வளப்படுத்துவது எது? *(1)*

அ. பேராறு
ஆ. சிற்றாறு
இ. வாய்க்கால்
ஈ. கடல்

(v) குடும்பம் பேணுவதை ஒரு பெருங் குறிக்கோளாக எண்ணுவதைக் கூறும் திருக்குறள் அதிகாரம் *(1)*

அ. வாய்மை
ஆ. கல்வி
இ. கேள்வி
ஈ. குடி செயல் வகை

**2. கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். *(5)***

இந்த உலகம் நிலம், நீர், காற்று, தீ, வானம் ஆகிய ஐம் பெரும் பூதங்களின் கூட்டுச் சேர்க்கையால் ஆனது.அவற்றின் இயக்கங்களால் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அவற்றுள்ளும் நீரின்றி உலகில் எந்த உயிரும் இயங்க இயலாது. அதனால்தான் வள்ளுவர் 'நீரின்றி அமையாது உலகு' என்று கூறிப் போந்தார். அந் நீரைத் தருகின்ற மழையின் சிறப்பை இன்றியமையாமையை உணர்ந்து திருக்குறளில் வான் சிறப்பு என்றோர் அதிகாரம் படைத்துப் புகழ்ந்துரைக்கின்றார். அப் பெருமகனார் மேலும் வானம் தன் பயனாகிய மழையைத் தராவிடில் இவ்வுலகில் தானம், தவம் ஆகிய இரு பெருஞ் செயல்களும் நடைபெறாவென்றும் மழைப் பயன் குன்றுமாயின் தெய்வத்திற்குச் செய்யப்பெறும் அன்றாட வழிபாடுகளும் பிற விழாச் செயற்பாடுகளும் கூடக் குன்றும் எனவும் கூறுகின்றார். சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள் மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் என்று மழையைப் போற்றி வணங்கி தம் காப்பியத்தைத் தொடங்குகின்றார். மேலும், மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை. மாரியல்லது காரியமில்லை என்பன போன்ற முது மொழிகளும் மழையின் சிறப்பை நமக்கு உணர்த்துகின்றன.

**வினாக்கள்**

(i) நிலம், நீர், காற்று, தீ, வானம்இவற்றின் சேர்க்கையால் உண்டானது *(1)*

அ. உலகம்

ஆ. கடல்

இ. விசும்பு

ஈ. வளி

(ii) உலகம் அமைய மிகவும் தேவைப்படுவது *(1)*

அ. நிலம்

ஆ. காற்று

இ. தீ

ஈ. நீர்

(iii) மழையின் சிறப்பை உணர்த்தும் திருக்குறள் அதிகாரம் *(1)*

அ. கல்வி

ஆ. வான் சிறப்பு

இ. கல்லாமை

ஈ. பொறையுடைமை

(iv) மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் என்று போற்றிய கவிஞர் *(1)*

அ. வள்ளுவன்

ஆ. கம்பன்

இ. இளங்கோ

ஈ. சாத்தனார்

(v) இளங்கோவடிகள் எழுதிய காப்பியம் *(1)*

அ. சிலப்பதிகாரம்

ஆ. மணிமேகலை

இ. நளவெண்பா

ஈ. குண்டலகேசி

**3. கீழ்வரும் பாடல் அடிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க.** ***(4)***

இனி பொறுப்பதில்லை - தம்பி
எரிதழல் கொண்டு வா
கதிரை வைத்திழந்தான் - அண்ணன்
கையை எரித்திடுவோம்

**வினாக்கள்**

(i) இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது? *(1)*

அ. பாஞ்சாலி சபதம்

ஆ. கண்ணன் பாட்டு

இ. குயில் பாட்டு

ஈ. கதர்ப் பாட்டு

(ii) இவ்வடிகளை எழுதியவர் யார்? *(1)*

அ. பாரதியார்

ஆ. மு. மேத்தா

இ. பாரதி தாசன்

ஈ. கண்ணதாசன்

(iii) இவ்வடிகளில் அண்ணன் என்பது யாரைக் குறிக்கும் *(1)*

அ. தருமர்

ஆ. பீமன்

இ. நகுலன்

ஈ. சகாதேவன்

(iv) எரிதழல் கொண்டு வா என்றவன் *(1)*

அ. கண்ணன்

ஆ. தருமர்

இ. பீமன்

ஈ. அருச்சுனன்

**4. விடையளிக்க.** **(ஒன்றனுக்கு மட்டும்)** **(5)**

(அ). சேர மன்னர் விடுத்த திருமுகத்திலுள்ள செய்தியை விவரிக்க.

(ஆ). கணியன் பூங்குற்றனார் மனித நேயம் மிக்கவர் என்று கூறுவதேன்.

(இ). நிலத்தடி நீரைச் சேர்ப்பதன் நோக்கங்கள் யாவை?

**5. ஏதேனும் ஒன்றினுக்கு விடையளிக்க.** **(5)**

(அ). கைக்கடியாரம் திருமால் காண் எவ்வாறு? விளக்குக.

(ஆ).தமிழ் விடு தூது ஆசிரியர் தமிழிடம் எடுத்துரைக்கும் விண்ணப்பத்தினை விளம்புக.

**6. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.** **(2)**

(அ).மொழியின் பயனைக் கூறுக.

(ஆ). இமயம் முதல் குமரி வரை ஓடும் ஆறுகள் யாவை?

(இ). பொய்கையார் சோழனை எவ்வாறு வாழ்த்தினார்?

**7. விரிவாக விடையளிக்க (ஒன்று மட்டும்)** **(6)**

அ. உருவு கண்டு யாரையும் உயர்வு தாழ்வாக நடத்தக் கூடாது. என்ற கருத்தை 'தேவதை' சிறுகதை வழி நிறுவுக.

ஆ. பாதுகை கதையைச் சுருக்கி வரைக?

**8. சுருக்கமாக விடையளிக்க** **(3)**

அ. அன்பரசியின் பண்பு நலன்களை எழுதுக.

ஆ. தேவதையின் பண்பு நலன்களை எழுதுக.